# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# இரண்டாம் பத்து

## இரண்டாம் திருவாய்மொழி - திண்ணன்வீடு
## எம்பெருமானுடைய பரத்வத்தை இதிஹாச புராண ப்ரக்ரியையாலே அவதாரத்திலே அநுஸந்தித்துப் பரோபதேசம் செய்தல்

** திண்ணன் வீடு * முதல் முழுதுமாய் *
எண்ணின் மீதியன் * எம்பெருமான் **
மண்ணும் விண்ணும் எல்லாம் * உடன் உண்ட * நம்
கண்ணன் கண் அல்லது * இல்லை ஓர் கண்ணே 1

ஏ பாவம்! பரமே! * ஏழ் உலகும் *
ஈ பாவம் செய்து * அருளால் அளிப்பார் ஆர்? **
மா பாவம் விட * அரற்குப் பிச்சை பெய் *
கோபால கோள் அரி * ஏறு அன்றியே 2

ஏறனைப் பூவனைப் * பூமகள் தன்னை *
வேறின்றி விண் தொழத் * தன்னுள் வைத்து **
மேல் தன்னை மீதிட * நிமிர்ந்து மண் கொண்ட *
மால் தனில் மிக்கும் ஓர் * தேவும் உளதே? 3

தேவும் எப்பொருளும் படைக்க *
பூவில் * நான்முகனைப் படைத்த **
தேவன் எம்பெருமானுக்கு அல்லால் *
பூவும் * பூசனையும் தகுமே? 4

தகும் சீர்த் தன் * தனி முதலினுள்ளே *
மிகும் தேவும் * எப்பொருளும் படைக்க **
தகும் கோலத் * தாமரைக் கண்ணன் எம்மான் *
மிகும் சோதி * மேல் அறிவார் யவரே? 5

யவரும் யாவையும் * எல்லாப் பொருளும் *
கவர்வு இன்றித் * தன்னுள் ஒடுங்க நின்ற **
பவர் கொள் * ஞான வெள்ளச் சுடர் மூர்த்தி *
அவர் எம் ஆழி * அம்பள்ளியாரே 6

பள்ளி ஆலிலை * ஏழ் உலகும் கொள்ளும் *
வள்ளல் * வல் வயிற்றுப் பெருமான் **
உள்ளுள் ஆர் அறிவார்? * அவன் தன் *
கள்ள மாய * மனக் கருத்தே 7

கருத்தில் தேவும் * எல்லாப் பொருளும் *
வருத்தித்த * மாயப் பிரானை அன்றி ** ஆரே
திருத்தித் * திண் நிலை மூவுலகும் * தம்முள்
இருத்திக் காக்கும் * இயல்வினரே 8

காக்கும் இயல்வினன் * கண்ண பெருமான் *
சேர்க்கை செய்து * தன் உந்தி உள்ளே **
வாய்த்த திசைமுகன் * இந்திரன் வானவர் *
ஆக்கினான் * தெய்வ உலகுகளே 9

கள்வா! எம்மையும் * ஏழ் உலகும் * நின்
உள்ளே தோற்றிய * இறைவ! என்று **
வெள்ளேறன் நான்முகன் * இந்திரன் வானவர் *
புள் ஊர்தி * கழல் பணிந்து ஏத்துவரே 10

** ஏத்த ஏழ் உலகும் கொண்ட * கோலக்
கூத்தனை * குருகூர்ச் சடகோபன் சொல் **
வாய்த்த ஆயிரத்துள் * இவை பத்துடன் *
ஏத்த வல்லவர்க்கு * இல்லை ஓர் ஊனமே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---